# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.27/2010

சாட்சி : DW– 2
பெயர் : செல்வி.சுபாஷினி தேதி : 13.02.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– ( வாதிகள் தரப்பில்)

நாங்கள் 2009 ம் ஆண்டில் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண்.60/2014 வழக்கை தாக்கல் செய்தோம். அதற்கு முன்பாகவே இவ்வழக்கு வாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளோமா என்றால் அனுப்பியுள்ளோம். அந்த அறிவிப்பின் நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 18.02.2009 அன்று நாங்கள் எங்கள் வழக்கறிஞர் மூலமாக தினசரி நாளிதழில் அறிவிப்பு கொடுத்தோம். அது பி.சா.ஆ–12 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் சம்பத்தின் சட்டப்படியான வாரிசுகள் தான் அசையும் மற்றும் அசையா சொத்துகளில் உரிமையுடையவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் உயிலை பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் சம்பத் இறந்தபோது எனக்கு 13 வயது என்றால் சரிதான். பி.சா.ஆ–15 ஆவணத்தில் என் தகப்பனாருக்கு பல்வேறு உடல் உபாதைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் இறப்பிற்கு முன்பு பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. கடைசியாக கோயம்புத்தூர் PSG மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். அதற்கு முன்பாக சித்த மருத்துவம் பார்த்து வந்தார். என் தகப்பனார் சித்த மருத்துவம் பார்த்தார் என்ற விவரத்தை என் வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை

Sd/- R. Velaras,
Additional District Judge,
Salem

என்றால் சரிதான். என் தகப்பனார் 2 வருட காலம் சித்த மருத்துவம் பார்த்து வந்தார். 1ம் வாதி சிவக்குமார் கோவா மாநிலத்தில் கப்பற் படையில் பணிபுரிந்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் வாதிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ராணுவ மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை வசதி உள்ளது என்ற காரணத்தினால் சம்பத் 1ம் வாதியின் தகப்பனார் என்ற முறையில் மேற்படி ராணுவ மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறப்பதற்கு கோயம்புத்தூர் PSG மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றார். அதற்கான கட்டணம் செலுத்தியதற்கான எங்களுக்கு வழங்கப்பட்ட ரசீதுகள் தான் பி.சா.ஆ–14 வரிசை ரசீதுகளாக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என் தகப்பனார் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றபோது அவருக்கு வழங்கப்பட்ட நோயாளி அடையாள எண் எனக்கு நினைவில் இல்லை. என் தகப்பனாருக்கு சிகிச்சை வழங்கப்பட்டபோது மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை ஏற்கனவே பி.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் தகப்பனார் சம்பத் PSG மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது சிவக்குமார் மற்றும் அவரது குடும்பத்தினர் கட்டணம் செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் சம்பத் அலகாபாத் வங்கியில் அதிகாரியாக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். அதே வங்கியில் பாதுகாப்பு பெட்டக எண்.13 ஐ என் தகப்பனார் பராமரித்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாண பத்திரம் பத்தி 9 மற்றும் 10ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எங்களது வழக்கிலோ, எங்களது பதிலுரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிவக்குமாருக்கு ரூ.50 ஆயிரமும், பானுமதிக்கு ரூ.1 லட்சமும், பிரியாவுக்கு ரூ.50 ஆயிரமும் சம்பத் கொடுத்தார் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல்

Sd/- R. Velaras,
Additional District Judge,
Salem

செய்துள்ளோம். நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வழக்கு சொத்துகளுக்கும் சிவக்குமார், பிரியா, மற்றும் பானுமதிக்கும் எவ்விதி சம்மதமும் இல்லை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விவாகரத்து வழக்கிலேயே வழக்கு சொத்துகளுக்கும், பானுமதி குடும்பத்திற்கும் எவ்வித சம்மதமும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தாவா 3 வது அயிட்ட சொத்து ஏற்காட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபோது மேற்படி 3 வது அயிட்ட சொத்தில் எவ்வித வில்லங்கமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஏற்கனவே அந்த சொத்திற்கு பணம் வாங்கி விட்டார். வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் தாவா 3 வது அயிட்ட சொத்தை 23.07.2010 அன்று நாங்கள் ஒரு மைக்கேல்ராஜ் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஏற்கனவே பணம் வாங்கிவிட்டதால் என் தாயார் ஆவணம் எழுதி கொடுத்தார். அதனால்தான் இவ்வழக்கில் 3 ம் பிரதிவாதியாக மைக்கேல்ராஜ் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஏற்காட்டில் உள்ள 3 வது அயிட்ட சொத்தை பொறுத்து நாங்கள் வழக்கில் எந்த பரிகாரமும் கோர இயலாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ–1 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் சம்பத்தின் கையொப்பம் அல்ல என்று மேற்படி ஆவணம் அறிவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பத் இறக்கும் வரையிலும் சிவக்குமார், பிரியா மற்றும் பானுமதியுடன் ஒரே குடும்பமாக தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. மேற்படி பானுமதி குடும்பத்திற்கு சொத்துகள் போககூடாது என்பதற்காகதான் நாங்கள் பி.சா.ஆ.1 உயில் சாசனத்தை போலியாக தயாரித்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில்

Sd/- R. Velaras,
Additional District Judge,
Salem

அ.வ.எண்.27/2010 வாதிகளுக்கு 2/3 பாக உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அ.வ.எண்.60/2014 வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து ஆத்தூர் தாலுக்கா கீரிப்பட்டியில் அமைந்துள்ளது. ஆத்தூர் நீதிமன்ற அதிகார எல்லைக்குடபட்ட சொத்திற்கு சேலம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், அவ்வாறு நாங்கள் சேலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.362/2009 வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றும், மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அ.வ.எண்.60/2014 என கோப்பிற்கு எடுக்கப்பட்ட போதிலும் மேற்படி வழக்கை விசாரிப்பதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.27/2010 வழக்கின் முதல் அயிட்ட சொத்தை பானுமதியின் நகைகளை விற்று சம்பத் கட்டினார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.27/2010 வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு 2/3 பாக உரிமை உள்ளது என்றும், எனக்கு 1/3 பாக உரிமை மட்டும்தான் உள்ளது என்றும், எனவே அ.வ.எண்.27/2010 வழக்கை அனுமதித்தும், அ.வ.எண்.60/2014 வழக்கை தள்ளுபடி செய்தும் தீர்ப்பளிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- R. Velaras,<br>
Additional District Judge,<br>
Salem